بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

March 14 2014

**மொழியாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

# இறை ஞானம், இறை நெருக்கம் பெறுவதற்கான வழிகள்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

சில ஜுமுஆக்களுக்கு முன்பு செயல் சீர்திருத்தத்திற்கான வழிகளைப் பற்றி சில குத்பாக்கள் கொடுத்திருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்முன் எவ்விதத்தில் அல்லாஹ்வை எடுத்து வைத்திருந்தார்கள் என்பதையும், இறை ஞானத்தையும், இறை அன்பையும் பெறுவதற்கு என்ன வழிமுறைகளைக் கூறியிருந்தார்கள்? என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தேன். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு அன்னார் என்ன வழிகாட்டினார்கள் என்பதையும், அதுபோன்று இறைவனுடைய புத்தம்புதிய வார்த்தைகளையும், அவர்களுக்காக இறைவன் காட்டிய அற்புதங்களையும், அடையாளங்களையும் அவை எத்துணை மகிமையுடன் நிறைவேறின என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தேன். இந்த அத்தனை விஷயங்களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வார்த்தைகளின் ஒளியில் பெற முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் நமது ஈமானிலும் அமலிலும் வளர்ச்சி ஏற்படக் காரணமாகும்.

எனவே, இன்று, இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எழுத்துகள் மற்றும் வழிகாட்டல்களின் சில முன்மாதிரிகளை எடுத்து வைக்கிறேன். இவற்றில் அன்னார் இறைஞானம் (மஃரிபத்தே இலாஹி) குறித்து வழிகாட்டினார்கள். இது தொடர்பாக, அவர்களது மேற்கோள்களை மட்டுமே எடுத்து வைத்தால் கூட அவை இருபது கணக்கில் அல்ல; நூற்றுக்கணக்கான பக்கங்கள்; ஆழமான முறையில் செல்வதாயின் கிடைத்து விடும். நான் கூறியது போன்று அதைப் பற்றிய சில மேற்கோள்களை மட்டுமே எடுத்து வைப்பேன். மஃரிஃபத்தே இலாஹி என்றால் என்ன? என்று அன்னார் வழிகாட்டுகிறார்கள். நபிமார்கள், அவ்லியாக்களுக்கு இதில் சிறப்பான இடம் உள்ளது. ஓர் சாதாரண முஸ்லிமுக்கு கூட இந்த விஷயத்தில் எந்த அளவுக்கு தரம் இருக்க வேண்டும்? என்பதை விளக்குகிறார்கள். எளிதாக புரியக்கூடிய மேற்கோள்களை எடுத்து வைக்க நான் முயற்சி செய்கிறேன். ஆனால் சில மேற்கோள்கள் சிரமமாகவும் இருக்கலாம் அல்லது அதன் மொழி சிரமமாக இருக்கலாம்.

***இறைவன் வரை சென்று சேர்வதற்கான பாதையின் பக்கம் சுட்டிக் காட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

மனிதன், இறைவன் வரை சென்று சேர்வதற்குத் தேவையானவை இரண்டு விஷயங்களாகும். ஒன்று, தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது. மற்றொன்று, நன்மையான செயல்களைப் பெறுவது ஆகும். தீமைகளை விட்டு விடுவது மட்டும் திறமையான காரியமல்ல. அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் பிறந்தது முதல் இரு ஆற்றல்கள் அவனது இயல்பில் அமைந்துள்ளன. ஒன்று, பாவத்தின் பக்கம் அவனை சாய்க்கின்ற மன எழுச்சிகள். மற்றொன்று, அவனது இயல்புக்குள் மறைந்துள்ள இறை நேசம் என்ற நெருப்பு ஆகும். வெளிப்படையான நெருப்பு வெளிப்படையான அழுக்கை எரிப்பது போன்று, இந்த நெருப்பும் மன அழுக்குகளை எரித்து விடுகிறது. அந்த பாவங்களை எரிக்கிற ஆன்மீக நெருப்பு மஃரிஃபத்தே இலாஹியுடன் தொடர்புடையதாகும். அந்த இறை ஞானம் இருந்தால் தான் எரிக்க முடியும். எனவே அது பாவங்கள் எரிக்கப்படுவதைச் சார்ந்துள்ளது. அந்த இறை ஞானம் மூலமாகவே பேரன்பு உருவாகிறது. எந்தவொரு பொருளின் அழகையும், மகத்துவத்தையும் பற்றி உங்களுக்கு தெரியாதோ அதன் மீது பேரன்பராக முடியாது. ஆகவே கம்பீரம் பொருந்திய அந்த இறைவனின் மென்மை மற்றும் அழகின் ஞானம்தான் அவன் மீது அன்பை உருவாக்குகிறது. அன்பின் நெருப்பின் மூலம் பாவம் எரிகிறது. ஆனால் இறைவனது சுன்னத்தின்படி சாதாரண மக்களுக்கு நபிமார்கள் மூலம் அந்த ஞானம் கிடைக்கிறது. அதன்

ஒளியிலிருந்து அவர்கள் ஒளி பெறுகிறார்கள். நபிமார்களுக்கு தரப்பட்டவற்றிலிருந்து அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் அதனை பெறுகிறார்கள்.

***பிறகு இதனையும் அன்னார் தெளிவுபடுத்தியுள்ளார்கள்:***

நான் எல்லா மதங்களைப் பற்றியும் படித்தேன். ஆழமாக ஆய்வு செய்தேன். அதன் பிறகு நான் எடுத்த முடிவாவது, இஸ்லாம் மட்டுமே இறைவனைப் பற்றிய உண்மையான மஃரிஃபத்தை எல்லாக் காலத்திலும் உருவாக்க முடியும். ஏனெனில் இதில் மட்டுமே நபியும் உயிருள்ளவர்; அதன் போதனையும் உயிருடன் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் மீது அன்பு கொள்வதன் மூலம் அவனது வார்த்தைகளும் கூட இறங்க முடியும். இறையொளிகளின் வாசல் திறக்கப்பட முடியும். அதிலிருந்து நீங்கள் அருள் பெற முடியும் என்பதாகும்.

***பிறகு இஸ்லாத்தின் உண்மைக்கும், இறை ஞானத்திற்கும் ஒரு தொடர்பு உள்ளது என்பதை தெளிவுபடுத்தியவாறு அன்னார் கூறினார்கள்:***

அறிவையும் இறை ஞானத்தையும் இஸ்லாத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்ளும் வழியாக இறைவன் ஆக்கியுள்ளான். இஸ்லாத்தின் உண்மைத்துவத்தைப் பெறுவதற்கு பல வழிகள் இருந்தாலும், உதாரணமாக, நோன்பு, தொழுகை, பிற எல்லா இறை கட்டளைகளான அவை **600** ஐ விட சற்று அதிகமாகவே இருந்தாலும் ஏகத்துவம் மற்றும் அவனது தனித்தன்மையின் மகத்துவம் குறித்த அறிவு, கம்பீரம் மற்றும் மென்மை குறித்த ஞானம் பெறுதல், அல்லாஹ்வுடைய பண்புகளைக் குறித்த ஞானம் போன்ற இவை அனைத்தும் இதனைச் சார்ந்ததாகும். இதன் மூலமே இறைவனைப் பற்றி அறிய வேண்டிய அளவுக்கு அறிய முடியும்.

ஒருவர், கவனமற்ற உள்ளத்துடனும், இறை ஞானம் குறித்து முற்றிலும் வாய்ப்பிழந்தவராகவும் இருக்கிறார் எனில், அவர் நோன்பும், தொழுகையும் கடைபிடிக்கவும், துஆ செய்யவும், அதுபோன்று மற்ற நற்செயல்களில் ஈடுபடவும் எப்போது வாய்ப்பை பெறுவார்? இந்த அனைத்து நற்செயல்களுக்கும் தூண்டுதல் இறை ஞானமேயாகும். மற்ற அனைத்து வழிகளும் இதனால் உருவானவையாகும். இதன் குழந்தைகளாகும்.

ஆரம்பத்தில் இந்த மஃரிஃபத் இறைவனது ரஹ்மானிய்யத் என்ற பண்பு மூலம் கிடைக்கிறது. மனிதனது எந்த அமல் மூலமோ துஆவின் மூலமோ கிடைப்பதில்லை. மாறாக அருள் பெறுவதற்குரிய காரணத்தைக் கொண்டிருந்தாலன்றி அல்லாஹ்வுடைய கொடையின் மூலம் இது ஆரம்பத்தில் கிடைக்கிறது. அது ரஹ்மானிய்யத் ஆகும். யஹ்தி ம(ன்)ய்யஷாவு வயுளில்லு ம(ன்)ய்யஷாவு என்று அல்லாஹ் கூறுகிறான். ஆனால் பிறகு அந்த இறைஞானம் நற்செயல்களும், ஈமானிய அழகும் சேர்வதால் மேலும் அதிகரிக்கிறது. முதல் விஷயம், இந்த மஃரிஃபத் அல்லாஹ்வின் புறமிருந்து தான் கிடைக்கிறது. அல்லாஹ்வுடைய ரஹ்மானிய்யத்தால் கிடைக்கிறது. ஆனால் பிறகு என்ன செய்ய வேண்டும்? இந்த மஃரிஃபத் கிடைத்த பிறகு மனிதன் என்ன செய்ய வேண்டும்? பிறகு அவன் அஃமாலே ஸாலிஹா செய்ய வேண்டும். ஈமானில் மேலும் அழகு சேர்ப்பது அவசியமாகும். ஈமான் அழகு பெறும் போது அஃமாலே ஸாலிஹாவும் அவசியம் ஏற்படும் எனில் அவரது மஃரிஃபத்தில் முன்னேற்றம் ஏற்படும். இறுதியில் இல்ஹாம் மற்றும் இறை வார்த்தை என்ற நிலையில் இறை அருளைப் பற்றியவாறு அவரது மனம், நினைவுகள் அதனை ஒளியூட்டி விடுகிறது. இதற்குப் பெயர் இஸ்லாம் ஆகும்.

பிறகு அல்லாஹ்வின் மஃரிஃபத் பாவத்திலிருந்து விடுதலையையும், நன்மை செய்யும் வாய்ப்பையும், தரம் வாய்ந்த துஆவையும் தருவது பற்றி ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

உண்மை என்னவெனில், எந்த மனிதனும் யதார்த்தத்தில் பாவத்திலிருந்து ஈடேற்றம் பெற முடியாது. உண்மையான முறையில் இறை நேசம் பெறவும் முடியாது. மேலும் அவனுக்கு பயப்பட வேண்டிய அளவுக்கு பயப்படவும் முடியாது. அவனது அருளால் வழங்கப்பட்ட அந்த மஃரிஃபத்தைப் பெறாமல் இதனை அடைய முடியாது. அவனிடமிருந்து சக்தி கிடைக்காமல் பெற முடியாது. மிகவும் வெளிப்படையான ஒரு விஷயம் என்னவெனில், ஒரு பயம், ஓர் அன்பு மஃரிஃபத் மூலமே கிடைக்கிறது. மனிதன் உள்ளம் கவருகின்ற எல்லா உலகியல் பொருள்கள் அல்லது அவன் பயப்படுகிற பொருள்கள் அல்லது எதை விட்டு விலகி ஓடுகின்றானோ அவையனைத்தும் மனித உள்ளத்தினுள் ஏற்பட்ட ஞானத்திற்குப் பிறகு தான் உருவாகின்றன. ஆம்! இதுவே உண்மை! இறையருள் இல்லாமல் மஃரிஃபத் கிடைக்க முடியாது. இறை அருள் இல்லாமல் அது பயன் தரவும் முடியாது. இறை அருள் மூலமே மஃரிஃபத் கிடைக்கிறது. மஃரிஃபத் மூலமே உண்மை தென்படுகிறது. மஃரிஃபத் மூலமே உண்மையைத் தேடுவதன் பக்கம் பாதைகள் திறந்து கொண்டே செல்கின்றன. பிறகு மேலும் மேலும் அருள்கள் இறைவனிடமிருந்து வந்து கொண்டே இருந்தால் தான் மஃரிஃபத்தின் வாசலும் திறந்தவாறு அடைக்கப்படாமல் இருக்கும்.

சுருக்கமாக, மஃரிஃபத் அருள்கள் மூலம் வருகிறது. பிறகு அருள் மூலமாகவே அது நிலைத்திருக்கவும் செய்கிறது. இறை அருள் மஃரிஃபத்தை மிகவும் தெளிவாக வெளிச்சமாக்கி விடுகிறது. நடுவிலிருந்து திரைகளை அகற்றி விடுகிறது. நஃப்ஸே அம்மாராவின் அழுக்குகளை அகற்றுகிறது. ரூஹுக்கு ஆற்றலை வழங்குகிறது. நஃப்ஸே அம்மாராவை கூடாரத்தை விட்டு அகற்றி விடுகிறது. தீய விருப்பம் என்ற மாசுகளிலிருந்து தூய்மைப்படுத்துகிறது. மன எழுச்சிகள் என்ற வெள்ளத்திலிருந்து வெளியில் கொண்டு வருகிறது. அப்போது மனிதனிடம் ஒரு மாற்றம் பிறக்கிறது. உடனே அவன் அசுத்த வாழ்விலிருந்து இயல்பாகவே வெளியில் வந்து விடுகிறான். இறையருள் மூலமாக அதற்குப் பிறகு உருவாகிற முதல் தூண்டுதல் துஆவாகும்.

நாம் தினமும் துஆ செய்கிறோம் என்று கருத வேண்டாம். நாம் தொழுகின்ற எல்லா தொழுகையுமே கூட துஆ தான். ஆனால் மஃரிஃபத் கிடைத்த பிறகு இறையருளால் கிடைக்கிற அந்த துஆ ஒரு தனி விதமாகவும், தரம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. அது மாய்த்து விட வைக்கிற பொருளாகும். உருக வைக்கிற நெருப்பாகும். ரஹ்மத்தை ஈர்க்கின்ற காந்த ஈர்ப்பு சக்தியாகும். அது ஒரு மரணமாகும். பிறகு அது வாழ்வை தந்து விடுகிறது. அது பெரும் வெள்ளமாகும். பிறகு அதுவே கப்பலாகி விடுகிறது. ஒவ்வொரு தடம்புரண்ட காரியமும் சீர்பட்டு விடுகிறது. அந்த விஷமே பிறகு ஒவ்வொரு விஷத்திற்கும் விஷ முறிவு மருந்தாக ஆகி விடுகிறது. இதுவே மஃரிஃபத்தின் அந்தஸ்தாகும்.

பிறகு பாவத்தின் பக்கம் மனிதன் ஏன் அதிகமாக விழுகிறான்? நஃப்ஸே அம்மாரா மனிதன் மீது ஏன் ஆதிக்கம் செலுத்துகிறது? என்று கூறினார்கள். அவர்கள் இதுபற்றி விளக்கியவாறு கூறினார்கள்:

பாவம் செய்யும் தைரியம் கூட உள்ளத்தில் இறையச்சம் இல்லாததன் விளைவால் வருகிறது. ஆனால் இந்த அச்சம் எப்படி உருவாகும்? அதற்கு மஃரிஃபத்தே இலாஹி தேவையாகும். எந்த அளவுக்கு இறைவனைப் பற்றிய ஞானம் ஏற்படுமோ அந்த அளவுக்கு பயமும் அதிகம் ஏற்படும். இறை ஞானம் எவ்வளவு அதிகம் இருக்குமோ அந்த அளவுக்கு அச்சம் இருக்கும்.

***கூறுகிறார்கள்:*** இவ்விஷயத்தில் அசல் என்பது மஃரிஃபத்தே ஆகும். அதன் விளைவு இறையச்சமாகும். மஃரிஃபத் இருந்தால், இறைவனை அறிந்து விட்டால், அவனைப் பற்றி உண்மை நிலை தெரிந்து விட்டால் பிறகு இறையச்சம் ஏற்படும். இது தொடர் விளைவாகும். மஃரிஃபத் என்பதன் உண்மைநிலை என்னவெனில், மஃரிஃபத் இருந்தால் மனிதன் சின்னஞ்சிறு பூச்சியிடம் கூட பயப்படுகின்றான். அதாவது அந்த பூச்சிகளைப் பற்றி மனிதனுக்கு தெரிய வரும் போது அவற்றை குறித்தும் மனிதன் பயப்படுகின்றான்.

***கூறுகிறார்கள்:*** தேள், கொசு பற்றி தெரியும் போது அவை தீங்கிழைப்பவை என்பதை அறியும் போது ஒவ்வொரு மனிதனும் அவற்றிடம் இருந்து தப்பிக்க முயலுகின்றான். என்ன காரணம்? இறைவனோ சர்வ வல்லமையும், சுதந்திரமும் உள்ளவன். நன்கு அறிந்தவன். நன்கு பார்ப்பவன். பூமி, வானங்களின் உரிமையாளன். அவனது கட்டளைக்கு எதிராக செயல்படுவதில் எந்த அளவுக்கு துணிச்சல் காட்டுகிறான்! சிந்தனை செய்தால், அம்மனிதனிடம் மஃரிஃபத் இல்லை என்பது தெரிய வரும்.

அதாவது அல்லாஹ்வைப் பற்றிய சரியான அறிவு இல்லாததால் தான் மனிதன் பாவத்தின் பக்கம் செல்கிறான். பலர் நாவினால் இறைவனை ஒப்புக் கொள்கின்றனர். அலசிப் பார்த்தால் அவர்களுக்குள் நாத்திகம் தான் இருக்கிறது என்று தெரிய வரும். ஏனெனில் உலக வேலையில் மூழ்கிவிடும் போது இறைவனது மகத்துவத்தையும் இறைவனது பிடியையும் முற்றிலும் மறந்து விடுகின்றனர். எனவே நீங்கள் துஆவின் மூலம் அல்லாஹ்விடம் மஃரிஃபத்தை வழங்குமாறு கேட்பது அவசியமாகும். அதுவன்றி முழுமையான நிச்சய உறுதி ஒருபோதும் கிடைக்காது. அப்போது தான் அல்லாஹ்வுடன் தொடர்பை துண்டித்து விடுவது ஒரு மரணம் என்ற அறிவு கிடைக்கும். பாவத்தை விட்டு தப்பிப்பதற்காக துஆ செய்யுமிடத்து முயற்சியின் தொடரையும் கூட கைவிட்டு விடக்கூடாது. பாவத்தைத் தூண்டுகின்ற எல்லா சபைகளையும் விட்டு விடுங்கள். கூடவே துஆவும் செய்து கொண்டிருங்கள். நமது உலகியல் சபைகள் எத்தகையவை? அவை பாவத்தின் பக்கம் எடுத்துச் செல்பவையாக உள்ளன. டி.வி., இணையதளம் (Internet), முகநூல் (Facebook) போன்றவை பற்றி இப்போது உலகியலாளர்கள் கூட உணரத் தொடங்கி விட்டனர். சமீபத்தில் கூட ஒரு செய்தி வந்தது. அமெரிக்காவிலேயே இந்த முகநூல் சிலரிடம் பெரும் நிம்மதியின்மையை உருவாக்கி விட்டது. அதில் கணக்கு வைத்திருந்த **6** இலட்சம் பேர் அதனை நிறுத்தி விட்டனர்.

எவ்வாறிருப்பினும், துஆ செய்யுங்கள். அத்துடன் முயற்சியையும் ஒருபோதும் கைவிட்டு விட வேண்டாம். பாவத்தைத் தூண்டுகின்ற எல்லா சபைகளையும் விட்டு விடுங்கள். கூடவே துஆவும் செய்து வாருங்கள். இறை

நியதிப்படி மனிதனுடன் உருவாகி இருக்கிற இந்த ஆபத்துகளில் இருந்து இறைவனது உதவி ஒத்துழைப்பு நல்காத வரை விடுதலை கிடைக்காது என்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள்.

பிறகு மஃரிஃபத்தே இலாஹி இல்லாமல் பாவத்திலிருந்து தப்பிக்கவே முடியாது என்பதை மேலும் விளக்கியவாறு ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு மனிதன் முழுமையாக இறைவன் மீது நம்பிக்கை கொள்ளும் போதுதான் வாய்ப்பு கிடைக்கிறது. திருக்குர்ஆனின் அழகு இதுவாகும். அது கூறுகிறது. பாவத்தின் பிடியிலிருந்து ஈடேற்றம் பெறுவதே மனிதனின் வாழ்க்கையின் பெரும் இலக்கு ஆகும். பாருங்கள்! ஒரு பாம்பு மிக அழகாக தோற்றம் தருகிறது. ஒரு குழந்தை அதனை பிடிக்க விரும்பலாம். கையை வைக்கவும் விரும்பலாம். ஆனால் பாம்பு கடித்து விடும்; அழித்து விடும் என்று அறிந்த ஓர் அறிவுள்ள மனிதன் அதனை நெருங்க ஒருபோதும் துணியமாட்டான். ஓரிடத்தில் பாம்பு உள்ளது எனத் தெரிந்தால் ஒருவர் அவ்விடத்தில் நுழைய மாட்டார். அதுபோன்று அழிவைத் தரக்கூடியது என்று கருதுகிற ஒரு விஷத்தை உண்பதற்கு ஒருவர் ஒருபோதும் துணியமாட்டார். அது போன்று பாவத்தை ஒரு ஆபத்தான விஷம் என்று நிச்சய உறுதி ஏற்படாத வரை அதிலிருந்து தப்பிக்க முடியாது. அந்த நிச்சய உறுதி மஃரிஃபத் இல்லாமல் கிடைக்க முடியாது. பிறகு என்ன விஷயம்? பாம்பு ஆபத்தானது. விஷம் ஆபத்தானது என்று தெரிந்த மனிதன் அதிலிருந்து தப்பிக்கிறான்.

***பிறகு கூறுகிறார்கள்:*** என்ன விஷயம்? இறைவன் மீது அவர் ஈமான் கொண்டு விட்ட பிறகும், பாவத்தை பாவம் என்று உணர்ந்தும் மனிதன் பாவம் செய்ய துணிந்து விடுகிறான். பாவத்தை அழிக்கிற இயல்பை உருவாக்குகிற அந்த மஃரிஃபத்தும் அகப்பார்வையும் இல்லாததே அதற்கு காரணமாகும். அது இல்லையெனில், அல்லாஹ் காப்பானாக. இஸ்லாம் அதன் தன்மையை விட்டு வெறுமையாகி விட்டது என்று ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும்! நான் கூறுகிறேன்: அப்படியல்ல. அந்த நோக்கத்தை இஸ்லாம் தான் முழுமையாக நிறைவேற்றியுள்ளது. அதற்கு ஒரே வழி இறைவனது உரையாடல்கள் ஆகும். அதன் மூலமே இறைவன் மீது மனிதனுக்கு முழுமையான நிச்சய உறுதி கிடைக்கிறது. அதிலிருந்து தெரிய வருகிறது. அல்லாஹ் பாவங்களைப் பற்றி விழிப்புணர்வு உள்ளவன். அவற்றை வெறுக்கிறான். அவற்றிற்கு தண்டனை தருகிறான். பாவம் ஒரு விஷமாகும். முதலில் அது சிறியதில் தொடங்கி பெரியதாகி விடுகிறது. இறுதியில் குஃப்ர் வரை கொண்டு சேர்த்து விடுகிறது.

பிறகு பாவத்திலிருந்து தடுப்பதற்கு மஃரிஃபத்தின் உண்மை நிலை குறித்து ஓரிடத்தில் ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்குகிறார்கள்:***

மஃரிஃபத் எத்தகையது எனில் அது மனிதனை பாவத்திலிருந்து தடுக்கிறது. ஒரு மனிதன் விஷம், பாம்பு, சிங்கம் போன்றவற்றை அழிவு தரக்கூடியது என்று அறிகிறார். பிறகு அதன் அருகில் செல்வதில்லை. இவை மனிதனை அழித்து விடக்கூடியது என்று அறிவதனால் அருகில் செல்வதில்லை. அதுபோன்று அவருக்கு பாவத்தைப் பற்றிய அறிவு இருக்கும் எனில் அவர் பாவத்தில் முன்னேற மாட்டார்.

எனவே நிச்சய உறுதியை அதிகமாக்குங்கள். அது துஆவினால் அதிகரிக்கும். தொழுகை என்பதே ஒரு துஆவாகும். எந்த அளவுக்கு கவனத்துடன் தொழுகையை நிறைவேற்றுவீர்களோ அந்த அளவுக்கு பாவத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள். மஃரிஃபத் வெறும் பேச்சால் கிடைப்பதில்லை. பெரும் பெரும் ஞானிகள் இறைவனை விட்டு விடக் காரணம் அவர்களது பார்வைகள் எல்லாம் படைக்கப்பட்ட பொருள்களின் மீது இருந்தது. துஆவின் பக்கம் கவனம் செலுத்தவில்லை. நாம் பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிட்டது போன்று இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கணிசமான விபரத்துடன் பராஹீனே அஹ்மதிய்யாவில் ஒளியூட்டியுள்ளார்கள்.

***கூறுகிறார்கள்:*** படைப்புகள் மனிதனுக்கு ஒரு படைப்பாளனின் இருப்பை, ஓர் ஆக்கியவன் இருக்க வேண்டும் என்பதை நிரூபிக்கின்றன. அதிலிருந்து அவன் 'இருக்கிறான்' என்று நிரூபணமாவதில்லை. மாறாக, 'இருக்க வேண்டும்' என்றே நிரூபணமாகிறது. 'இருக்க வேண்டும்' என்பது வேறு. 'இருக்கிறான்' என்பது வேறு. 'இருக்கிறான்' என்ற அறிவு துஆ இல்லாமல் ஏற்பட முடியாது. அல்லாஹ்வுடைய இருப்பிற்கான அறிவு துஆவின் மூலமே ஏற்படுகிறது. அறிவை மட்டும் பயன்படுத்துபவர் 'இருக்கிறான்' என்ற அறிவைப் பெற முடியாது. 'இருக்க வேண்டும்' என்பதற்கும், 'இருக்கிறான்' என்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை அறிவை மட்டும் பயன்படுத்துபவரால் பெற முடியாது. எனவே ஒரு மரபுத் தொடர் உண்டு. 'இறைவனை இறைவன் மூலமே கண்டறியப்படுகிறது'. லா துத்ரிஹுல் அப்ஸார் –க்கும் இதுவே பொருள். அவனை வெறும் அறிவு கொண்டு உணர முடியாது. அவன், அவனே கூறியுள்ள வழிகள் மூலமே அவனது இருப்பைக் கண்டறிய வைக்கிறான்.

இதற்காக, اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۙ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்பதைத் தவிர வேறு துஆ இல்லை.

***பிறகு உண்மையான தவ்பாவை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:***

இறைவனைத் தேடி அதில் உறுதியாக நிற்கும்போது அவனை பெறுகிறார். பெறுவது மட்டுமின்றி அவனை பார்த்து விடுகிறார் என்பது எனது ஈமானாகும். உலக அறிவைப் பெறுவதற்கு எவ்வளவு நேரமும் பணமும் செலவழிக்க வேண்டியுள்ளது? இந்த ஆன்மீக அறிவைப் பெறும் விதிமுறைகளைத் தெளிவாக கூறுகின்றார்கள். அதாவது உலகியல் கல்விக்காக உழைப்பும், பணமும் செலவழிக்கப்படுகிறது. அதே விதிமுறைகள் தான் ஆன்மீகக் கல்விக்கும் அவசியமாகும்.

***கூறுகிறார்கள்:*** ஆன்மீகக் கல்வியை பின்தொடர்பவர் ஒருவர் நமது கோட்பாட்டின் கீழ் முதலில் இறை இருப்பு மற்றும் அவனது பண்புகளைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். பிறகு அந்த அறிவுடைமை நிச்சய உறுதி என்ற நிலைக்குச் சென்றுவிட வேண்டும். அதன் பிறகு அல்லாஹ்வுடைய இருப்பு அவனது முழுமையான பணிகள் பற்றி தெரிவித்து தரப்படும். அவரது ரூஹ் உள்ளிருந்து அவரிடம் பேசும். முழுமையான திருப்தியுடன் நான் இறைவனை பெற்று விட்டேன். எனவே அல்லாஹ்வைப் பற்றி யகீன் என்ற நிலையை அடைகின்ற ஈமான் உருவாக வேண்டும். இறைவனை பார்த்து விட்டது போன்று மனிதன் உணர வேண்டும். இறைபண்புகளைப் பற்றிய அறிவுடைமை பிறக்க வேண்டும். பிறகு பாவத்தின் மீது வெறுப்பு ஏற்படுகிறது. முதலில் பாவத்தின் மீது குனிந்த அவரது இயல்பு அதனை விட்டு விலகி அதனை வெறுக்கத் தொடங்கி விடுகிறது. இதுவே தவ்பாவாகும்.

***பிறகு மஃரிஃபத்தே இலாஹியை பெறுவதற்கு இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் –க்கு விளக்கம் அளித்தவாறு கூறுகிறார்கள்:***

சூரா ஃபாத்திஹா ஐவேளை கடமையான தொழுகைகளிலும் ஓதப்படுகிறது. இந்த துஆ தான் அதில் கற்றுத் தரப்பட்டுள்ளது.

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۙ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

உம்மத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த வெகுமதி வழங்கப்பட்டதற்காக ஏன் மறுக்கப்படுகிறது? சூரா ஃபாத்திஹாவில் கேட்கப்பட்டதும், நபிமார்களுக்கு வழங்கப்பட்டதுமான அந்த வெகுமதி திர்ஹமும் தினாருமா? அன்பியா அலைஹிமுஸ்ஸலாமுக்கு இறைவனுடன் உரையாடல்கள் என்ற அந்த வெகுமதிதான் வழங்கப்பட்டிருந்தது என்பது வெளிப்படையாகும். அதன் மூலமே அவர்களது மஃரிஃபத், ஹக்குல் யகீன் என்ற நிலைக்கு உயர்ந்தது. இந்த இறை வசனிப்பு என்ற தகுதி இறைவனை நேரடியாகக் காண்பதற்கு இணையானதாக ஆகி விட்டது. இவ்வளவு அதிகமாக இறைவனுடைய நெருக்கம் கிடைத்து விடுகிறது.

***கூறினார்கள்:*** ஆகவே இவ்வாறு துஆ செய்யப்படுகிறது. இறைவனே எங்களுக்கும் அதுபோன்ற நிஃமத்துகளுக்கு வாரிசாக்குவாயாக! எமக்கும் அந்த இறை உரையாடல்கள் என்ற சிறப்பினை வழங்குவாயாக! என்பதைத் தவிர வேறென்ன பொருள்? இந்த இடத்தில் எமது ஈமானை வலுப்படுத்துவாயாக! அமலோ ஸாலிஹாவை வழஙகுவாயாக! நீ திருப்தியடைகிற காரியத்தை எம்மை செய்ய வைப்பாயாக! என்று மட்டுமே பொருள் என்று சில அறிவற்றவர்கள் கூறுகின்றனர். அந்த அறிவற்றவர்கள் அறிவதில்லை. ஈமான் வலுவடைவது அமலே ஸாலிஹா செய்வது, இறைவனது திருப்திக்கேற்ப அடியெடுத்து வைப்பது ஆகிய அனைத்து விஷயங்களும் முழுமையான மஃரிஃபத் கிடைப்பதன் விளைவாகும். எந்த உள்ளத்திற்கு இறைவனது மஃரிஃபத்தில் இருந்து சிறிதும் பங்கு கிடைக்கவில்லையோ அந்த உள்ளம் வலுவான ஈமான் மற்றும் அமலே ஸாலிஹா ஆகியவற்றை விட்டும வாய்ப்பிழந்ததாகும். அதுவும் கூட அவர்களுக்கு கிடைக்காது. மஃரிஃபத் மூலமே இறையச்சம் உள்ளத்தில் உருவாகிறது. மஃரிஃபத் மூலமே இறை நேசம் உள்ளத்தில் வீறு கொண்டு எழுகிறது. உலகிலும் கூட பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு பொருள் குறித்த பயமும், அன்பும் கூட மஃரிஃபத்தின் மூலமே உருவாகிறது. இருளில் ஒரு ஆக்ரோஷமான சிங்கம் உங்கள் முன் நின்றால், அந்த சிங்கம் ஆக்ரோஷமாக நிற்கிறது என்று உங்களுக்கு தெரியா விட்டால் அது வெறும் ஆடுதான் என்று நீங்கள் நினைத்திருந்தால் சிறிதும் பயம் ஏற்படாது. இது ஒரு ஆக்ரோஷமான சிங்கம் என்று தெரிய வரும் போது தம்மை அறியாமல் அவ்விடத்தை விட்டு ஓடுவீர்கள். அதுபோன்று காட்டில் பல இலட்சக் கணக்கான மதிப்புள்ள ஒரு வைரம் கிடைக்கிறது. அது வெறும் கல் துண்டு என்று கருதினால் அதனை சிறிதும் பொருட்படுத்தமாட்டீர்கள். ஆனால் அது மகிமையும் மகத்துவமிக்க வைரம் என்று தெரிந்தால் அதன் மீது கொண்ட பிரியத்தால் பைத்தியமாகி விடுவீர்கள். எவ்வளவு உங்களால் முடியுமோ அவ்வளவுக்கு அதனைப் பெற முயற்சி செய்வீர்கள்.

ஆகவே எல்லா அன்பும், அச்சமும் மஃரிஃபத்தைத் சார்ந்ததாகும். மனிதன் ஒரு பொந்தினுள் கடும் விஷப்பாம்பு இருப்பதாகத் தெரிந்தால் அதில் கைவிட மாட்டான். அதுபோன்று மிகவும் மதிப்புவாய்ந்த புதையல் ஒன்று கீழே இருப்பதாக உறுதி ஏற்பட்டால் ஒரு மனிதன் அவ்விடத்தை விட்டு நகரமாட்டான். ஏனெனில் இவை அனைத்து பயமும், பற்றும் அதனைப் பற்றிய அறிவைச் சார்ந்ததுள்ளது. மனிதனும் இறைவனைப் பற்றி மஃரிஃபத் ஏற்படும் போது அவன் பக்கம் முழுமையாகக் குனிய முடியும். இறைவனைப் பற்றிய சரியான மஃரிஃபத் ஏற்படும் போதுதான் அவன் மீது அன்பும் ஏற்படும். அப்போதுதான் அச்சமும் உள்ளத்தில் ஏற்படும்.

***கூறினார்கள்:*** முதலில் அவனது இருப்பை அறிய வேண்டும். பிறகு அவனது சிறப்புகள், முழுமையான ஆற்றல்கள் வெளிப்படும். இவ்வகையான மஃரிஃபத் எப்போது கை கூடும்? ஒருவருக்க இறைவனுடைய உரையாடல்கள் என்ற சிறப்பு கிடைத்து பிறகு மறைவானவற்றை அறிந்தவனும், விரும்புவதை செய்பவனுமாகிய இறைவனது இல்ஹாமும் கிடைப்பதன் மூலம் அந்த மஃரிஃபத் கிடைக்கிறது. எனவே ஈமானிய வலுவும், அமலே ஸாலிஹாவும் சார்ந்துள்ள அந்த அசல் நிஃமத் இறைவனது வசனிப்பே ஆகும். அதன் மூலமே முதலில் அவனை அறிய முடிகிறது. பிறகு அவனது ஆற்றல்களைத் தெரிய முடிகிறது. பிறகு அவனது தகவலுக்கேற்ப மனிதன் அந்த ஆற்றலில் ஊற்றை தன் கண்களால் காண்கின்றான். இந்த நிஃமத் தான் அன்பியா அலைஹிமுஸ்லாமுக்கு தரப்பட்டிருந்தது. பிறகு இந்த நிஃமத்தை என்னிடம் கேளுங்கள். நான் உங்களுக்கும் தருகிறேன் என்று கட்டளை பிறந்தது. எனவே எவரது உள்ளத்தில் இந்த நிஃமத்தைப் பெற வேண்டும் என்ற வேட்கை தரப்பட்டதோ அவருக்கு நிச்சயமாக அந்த நிஃமத் கிடைக்கும்.

பிறகு நன்மைகளைக் கடைபிடிப்பது, தீமைகளைத் தடுப்பதற்கு மஃரிஃபத்தே இலாஹியின் அவசியம் குறித்து மேலும் ஒளியூட்டியவாறு கூறினார்கள்:

எல்லா பேறுபெற்றவர்களின் எல்லையும் இறை உணர்வேயாகும். மன எழுச்சிகள், ஷய்த்தானிய தூண்டுதல்களிலிருந்து தடுப்பது ஒரேயொரு விஷயம் தான். அது இறைவனது முழுமையான மஃரிஃபத் என்று அழைக்கப்படுகிறது. அதன் மூலம் இறைவன் இருக்கிறான் என்றும் இறைவன் வல்லமையுள்ளவன்; கடுமையான தண்டனை வழங்குபவன் என்றும் தெரிந்து விடும். மனிதன்து செத்துப்போன வாழ்வு, கட்டுப்படாத வாழ்வு ஆகியவற்றை எரித்து விடுகின்ற மின்னல் ஆகி அவற்றை சாம்பலாக்கி விடக்கூடியது இந்த மருந்தாகும்.

ஆக எதுவரை மனிதன் ஆமன்துபில்லாஹி என்ற எல்லையில் இருந்து வெளிவந்து அரஃதுபில்லாஹ் என்ற இடத்தில் அடியெடுத்து வைக்கவில்லையோ அதாவது அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டேன் என்ற நிலையை விட்டு அல்லாஹ்வை அறிந்து கொண்டேன் என்ற நிலையில் அடியெடுத்து வைக்கவில்லையோ அதுவரை அவர் பாவத்தில் இருந்து தப்பிப்பது சாத்தியமற்றதாகும். பாவத்திலிருந்து அவர் தப்பிப்பது மிகவும் சிரமமாகும். இறைவன் மீது நம்பிக்கை கொண்டு அவனது மஃரிஃபத்தைப் பெறுவதால் மட்டும் எவ்வாறு பாவத்திலிருந்து தப்பிக்க முடியும்? இது எப்படிப்பட்ட விஷயம் எனில், நாம் அதனை மறுக்க முடியாது. நமது தினசரி அனுபவம் இவ்விஷயத்திற்கு ஆதாரமாகும். எதனைப் பற்றி பயப்படுகிறானோ அதன் அருகில் செல்வதில்லை. பாம்பு கொட்டும்; அது கொட்டினால் மரணம் தான் என்ற அறிவு இருந்தால் எந்த அறிவுடையவர் அதன் வாயின் பக்கம் கையை வைக்கத் துணிவார்? ஓரிடத்தில் ஒரு விஷப்பாம்பு கொல்லப்பட்டதாகத் தெரிந்தால் கூட அந்தக் கம்பைக் கூட அதில் விஷத்தின் தாக்கம் இருக்குமோ என்ற அச்சத்தால் தொடமாட்டார். அதுபோன்று இந்த காட்டில் சிங்கம் இருக்கிறது என்று தெரிய வந்தால் அதில் அவர் பயணம் செய்வது சாத்தியமில்லை. குறைந்தபட்சம் தனியாகச் செல்ல முடியாது. குழந்தைகளிடம் கூட அந்த அடிப்படை உணர்வு உள்ளது. ஒரு பொருள் ஆபத்தானது என்று உறுதி செய்யப்பட்டு விட்டால் அவர்கள் அதனைக் கண்டு அஞ்சுகின்றனர். எதுவரை மனிதனிடம் இறைவனது மஃரிஃபத்; பாவம் என்பது விஷம் என்ற உறுதி உருவாவதில்லையோ அதுவரை எவரது தற்கொலையோ, குர்பானியின் இரத்தமோ அவருக்கு ஈடேற்றம் தர முடியாது.

நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். இறைவன் இருக்கிறான். அவனது வாள் இருக்கிறது. ஒவ்வொரு கட்டுப்படாமையின் போது, அது மின்னல் போன்று இறங்குகின்றது என்ற மின்னுகின்ற ஒரு யகீன் அவரிடம் உருவாகாத வரை பாவத்தின் வெள்ளம், மன எழுச்சியின் நதியை மனிதன் நிறுத்த முடியாது. இறைவன் மீது ஈமான் கொள்கிறேன் என்றும் அவனுக்கு கட்டுப்படாதவருக்கு தண்டனை தருகிறான் என்றும் ஈமான் கொள்கிறேன். ஆனால் பாவம் என்னை விட்டு அகலுவதில்லை என்று ஒருவர் கூறினால் அவர் பொய் கூறுகிறார் என்று தான் அவருக்கு நான் பதில் கூறுவேன். அது பொய்யும் நஃப்ஸின் தவறும் ஆகும். உண்மையான ஈமான் உண்மையான யகீன் ஆகியவற்றிற்கும் பாவத்திற்கும் பரஸ்பரம் பகைமை உள்ளது. உண்மையான ஈமானும், ஒளிரக்கூடிய நன்மையும் இருக்கும் எனில் பாவம் இருப்பது சாத்தியமில்லை.

***பிறகு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:*** இறை உணர்வின் பக்கம் விரைவில் அடியெடுத்து வைக்க வேண்டும். இறைவனது ரசனை அவனை உணர்ந்தவனுக்கே ஏற்படுகிறது. ஒருவர் உண்மையுடனும் விசுவாசத்துடனும் அவன் முன் அடியெடுத்து வைக்காத வரை துஆ தெளிவாக ஒப்புக் கொள்ளப்படாது. அதில் ஏதாவது இருள் இருக்கவே செய்யும். இறைவன் பக்கம் நீங்கள் சிறிதளவு முன்னேறினாலும் அவன் அதிகமாக உங்கள் பக்கம் வருவான். ஆனால் முதலில் நீங்கள் அவன் பக்கம் அடியெடுத்து வைப்பது அவசியமாகும். எந்த வகையிலும் அவன் பக்கம் அசையாமல் அவனிடம் எதிர்பார்ப்பது குறைவுடைய சிந்தனை ஆகும். இறைவனது சுன்னத் இவ்வாறு தான் தொடர்கிறது. மனிதனிடம் இருந்து ஒரு செயல் ஏற்படும் போது அதன் விளைவாக இறைவனிடம் இருந்து ஒரு செயல் வெளிப்படுகிறது. ஒரு மனிதர் தமது வீட்டின் கதவை மூடி விட்டால், மூடுவது அவரது செயலாக இருக்கும். இறைவனது செயல் அவ்விடத்தில் எவ்வாறு வெளிப்படும் எனில், அவ்விடம் இருளாகி விடும். ஆனால் மனிதன் இந்தக் களத்தில் பொறுமையை மேற்கொள்ள வேண்டும். சிலர் புகார் கூறுகின்றனர். நாங்கள் எல்லா நற்செயல்களும் செய்தோம்; தொழுதோம்; நோன்பு வைத்தோம்; ஸதகா கைராத் செய்தோம்; முயற்சிகள் செய்தோம். ஆனால் எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அத்தகையோர் பேரிழந்தவர்கள் ஆவர்.

இவர்கள் இறைவனது ருபூபிய்யத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. தமது எல்லா செயல்களையும் இறைவனுக்காகச் செய்வதில்லை. இறைவனுக்காக ஒரு அமல் செய்யப்படுமானால் அது வீணாகி விடுவதும் இறைவன் அதற்கான கூலியை இவ்வுலகிலேயே தராமல் இருப்பதும் சாத்தியமில்லை. இறைவனது இருப்பை அறிவதில்லை. அவன் இருக்கிறானா? இல்லையா? என்று சிலர் ஐயத்தில் விழுகின்றனர்.

ஒரு துணி தைக்கப்பட்டிருந்தால் இதனை தைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்று மனிதன் அறிகிறார். ஒரு கடிகாரம் நேரம் காட்டுகிறது. அது மனிதனுக்கு காட்டில் கிடைத்தால் கூட இதனை உருவாக்கியவன் ஒருவன் இருக்கிறான் என்றே கண்டிப்பாகக் கருதுவார். அதுபோன்று இறைவனது செயல்களைப் பாருங்கள். அவன் என்னென்ன கடிகாரங்களை உருவாக்கி வைத்துள்ளான். என்னென்ன வியத்தகு வல்லமைகள் உள்ளன! ஒருபுறம் அவை அவனது இருப்பிற்கு அறிவுப்பூர்வமான சான்றுகளும் மறுபுறம் அடையாளங்களும் மனிதனை ஓர் மகத்தான வல்லமையுள்ள இறைவனை ஒப்புக் கொள்ள வைக்கின்றன. முதலில் அவன் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களிடம் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினான். இதையே நபிமார்கள் கொண்டு வந்தனர். அதற்கு முன்னறிவிப்புகள் என்று பெயர்.

***பிறகு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:***

மார்க்கத்தின் வேர் இறை உணர்வும், இறைத் தோற்றத்தின் ஞானமும் ஆகும். அதன் கிளைகள் அமலே ஸாலிஹா. அதன் பூக்கள் உயர் நல்லொழுக்கங்கள். அதன் பழம் ஆன்மீக பரக்கத்துகள், நுட்பமான நேசம் ரப்பிற்கும் அவனது அடியாருக்கும் இடையில் உருவாவது. அந்த பழத்திலிருந்து பலன் பெறுவது ஆன்மீக பரிசுத்தத்தின் பழமாகும். முழுமையான ஞானத்தின் மூலமே முழுமையான அன்பு பிறக்கிறது. மஃரிஃபத்தே இலாஹிக்கு ஏற்ப இறைவன் மீது பேரன்பு பீறிட்டு எழுகிறது. தனி அன்பு ஒருவரிடம் பிறந்து விட்டால் அது அவரது ஆன்மீகப் பிறப்பின் முதல் நாளாகும். அந்தக் கணமே புதிய உலகின் முதல் கணம் ஆகும்.

***பிறகு கூறுகிறார்கள்:*** இறைவன் ஒரு முத்து ஆகும். அவனது மஃரிஃபத்திற்குப் பிறகு மனிதன் உலகப் பொருள்களை மிகவும் இழிவானதாகப் பார்க்கின்றான். அவற்றைப் பார்ப்பதில் கூட அவனிடதில் ஒரு வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. எனவே இறைவனது மஃரிஃபத்தை விரும்புங்கள். அவன் பக்கமே அடியெடுத்து வையுங்கள். அதிலேயே வெற்றி உள்ளது.

***கூறுகிறார்கள்:*** நான் உண்மையாகவே கூறுகிறேன். மனிதனது தக்வா, ஈமான், இபாதத், தூய்மை அனைத்தும் வானத்திலிருந்து தான் வருகின்றன. அல்லாஹ்வின் அருளைச் சார்ந்த விஷயங்களாகும். அவன் விரும்பினால் நிலைநிறுத்துவான். அவன் விரும்பினால் அகற்றி விடுவான். ஆகவே உண்மையான இறைஞானம் என்பது மனிதன் தனது நஃப்ஸை அழிந்ததாகவும் ஒன்றுமற்றதாகவும் கருதுவதன் பெயராகும். இறை சன்னிதானத்தில் வீழ்ந்து உருக்கத்துடனும் பணிவுடனும் அவனது அருளை வேண்ட வேண்டும். மஃரிஃபத்தின் ஒளியை வேண்டுங்கள். அது மன எழுச்சியை எரித்துப் போடுகிறது. உள்ளுக்குள் ஒளியின் மீதும் நன்மையின் மீதும் வெப்பத்தை உருவாக்குகிறது. பிறகு அவனது அருளால் அதில் பங்கு கிடைக்கலாம். பிறகு ஏதாவதொரு நேரத்தில் அவனது அருளால் உள்ளத்தின் விரிவு ஏற்படலாம். அதனால் பெருமை கொள்ளக் கூடாது. மாறாக அதனால் அவரது பணிவு உருக்கம் மேலும் வளர வேண்டும். ஏனெனில் எந்த அளவுக்கு ஒருவர் தன்னை ஒன்றுமற்றதாக கருதுவாரோ அந்த அளவுக்கு தகுதிகளும் ஒளிகளும் இறைவனிடமிருந்து இறங்கும். அதன் ஒளிகளையும் ஆற்றலையும் கொண்டு

வரும். மனிதன் இந்தக் கோட்பாட்டை வைத்திருந்தால், அவனது ஒழுக்கநிலை இறை அருளால் சிறந்ததாகி விடும் என்று எதிர்பார்க்கலாம். உலகில் தம்மை ஒரு பொருட்டாகக் கருதுவதும் கூட தற்பெருமையாகும். இந்த நிலைமை மனிதனுக்கு ஏற்பட்டு விடுகிறது. அவர் மற்றவரை சபிக்கிறார். பிறரை இழிவாகக் கருதுகிறார்.

நான் இவை அனைத்தையும் மீண்டும் மீண்டும் கூறக்காரணம், இறைவன் இந்த ஜமாஅத்திடம் உருவாக்க விரும்புவதாவது, அசல் மஃரிஃபத் உலகை விட்டு தொலைந்து விட்டது. உண்மையான தக்வா, தூய்மை இக்காலத்தில் காண முடியவில்லை. அதனை உலகில் மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்பதாகும்.

***மேலும் இதுபற்றி கூறுகிறார்கள்:*** இப்பொழுதும் உலகில் கட்டுப்படாமையும் பாவமும் மிகவும் அதிகரித்து விட்டது. இறை உணர்வின் வழிகளைக் காண முடியவில்லை. அல்லாஹ் இந்த இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான். முழுக்க முழுக்க தனது அருளால் என்னை அனுப்பியுள்ளான். அல்லாஹ்வை விட்டும் கவனமற்றும் அறியாமலும் இருக்கின்ற மக்களிடம் தகவல் தெரிவிக்கவும். தகவல் தெரிவிப்பது மட்டுமின்றி உண்மை மற்றும் நன்றி உணர்வுடன் வந்தால் அவருக்கு இறைவனை காட்டித்தரவும் அனுப்பினான். அவரை ஏற்றுக் கொண்ட பிறகு அவனை பார்க்கவும் முடியும்.

இந்த அடிப்படையில் அல்லாஹ் என்னை விளித்து 'நீ என்னைச் சார்ந்தவன்; நான் உன்னைச் சார்ந்தவன்' என்று கூறினான். இதற்காகவே அவர்கள் தோன்றினார்கள். இறைவனிடமிருந்து நம்மிடம் ஒரு மஃரிஃபத்தை உருவாக்குவதற்காக தோன்றினார்கள். அதன் மூலம் நாம் இறைவனைப் பார்ப்பவரைப் போன்று ஆகிவிடுவோம். ஒவ்வொரு செயலையும் இறைவனது அன்பு இறையச்சம் ஆகியவற்றை முன் வைத்து செய்யுங்கள். நமது எல்லா பாவங்களையும் அழித்து விடுகிற அத்தகைய மஃரிஃபத் நம்மிடம் உருவாகட்டுமாக. நாம் அன்னாரது தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர் ஆவோமாக. அல்லாஹ் இந்த எல்லா விஷயங்களின் பக்கமும் அமல் செய்வதற்கும் அதன் ரூஹைப் புரிவதற்கும் வாய்ப்பு தருவானாக!

இங்கு ஜனாஸா ஒன்று வரவிருந்தது. வந்து விட்டதா? ஜுமுஆவுக்குப் பிறகு ஒரு ஜனாஸா ஹாஸிர் தொழுகை நடத்தப்படும். நீங்கள் மஸ்ஜிதில் இருக்க வேண்டும். நான் கீழே சென்று ஜனாஸா தொழுகை நடத்துவேன். கண்ணியத்திற்குரிய அப்துல் புஹான் மன்னான் தீன் சாஹிப் உடைய ஜனாஸா. அப்துல் மன்னான் தீன் சாஹிப் உடைய மகன் தமது 72வது வயதில் நேற்று வஃபாத் ஆகிவிட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் இங்கு வந்த ஆரம்ப கால மக்களைச் சார்ந்தவர். 1945 –ல் இங்கு இங்கிலாந்திற்கு வந்திருந்தார். ஜல்ஸா ஸாலானாவில் 30 வருடம் வரை அமானத் துறையில் தொண்டு செய்துள்ளார். பழைய மக்களைச் சார்ந்தவர். நஸீருத்தீன் சாஹிப் உடைய சச்சா மகன் ஆக இருந்தார். நான் கூறியது போன்று ஜனாஸா தொழுகை ஜுமுஆவிற்குப் பிறகு நடத்தப்படும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **14.03.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456